**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No. 353/2008 |
| Preliminary register | |
| Sessions | |
| Deposition Of Witness for | Prosecution PW 5<br>Defense<br>Court |
| Name | திரு. ஆதிமூலம் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

3 ம் *எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.*

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06th day of March 2026.

நான் தற்போது மூலைக்கரைப்பட்டி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 21.05.2008 ஆம் தேதி 21.30 மணிக்கு தலைமை காவலர் மாரியப்பன் என்பவர் நிலையபொறுப்பில் இருக்கும் போது பரப்பாடி கீழஇலங்குளம் வடக்குதெருவை சேர்ந்த துரைபாண்டி நாடார் மகள் சுப்பம்மாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனு பெற்று அதன் தன்மைகேற்ப குற்ற எண். 50/2008 இதச பிரிவுகள் 294(பி), 345, 323, 324 என்ற வழக்கை பதிவு செய்தார். அந்த புகார் மனு **அ.சா.ஆ.4** ஆகும். முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.5** ஆகும்.

புகார் மனுவை அசல் தகவலறிக்கையுடன் இணைத்து கனம் நான்குநேரி நீதிமன்றம் அனுப்பியும் சம்மந்தப்பட்ட நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், விசாரணை நகலை உதவி ஆய்வாளர் முத்துசுப்பிரமணியன் அவர்கள் பார்வைக்கு வைத்தார். அவர் விசாரணை நகலை எடுத்துகொண்டு 21.05.2008 ஆம் தேதி 22.30 மணிக்கு சம்பவ

இடம் சென்று சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறங்களையும் சாட்சிகள் சிவனனைந்த பெருமாள், லெட்சுமண பெருமாள் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.6** ஆகும். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.7** ஆகும்.

சாட்சிகள் சுப்பம்மாள், மகாலெட்சுமி, கார்த்திகேயன், மாரியப்பன் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்தார். வாதிக்கு காயச்சான்றிதழ் வழங்கிய மருத்துவர் ஜீவா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மருத்துவர் வாதிக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கியுள்ளார். அவர் அளித்த காயச்சான்றிதழ் **அ.சா.ஆ.8** ஆகும்.

23.05.2008ம் தேதி காலை 10.30 மணிக்கு இவ்வழக்கின் எதிரிகளான 1ம் மற்றும் 2ம் எதிரிகளை செண்பகராமநல்லூர் பஸ்ஸ்டாப் அருகே வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தார். 29.05.2008ம் தேதி காலை 10.00 மணிக்கு 3ம் மற்றும் 4ம் எதிரிகளை மூலைக்கரைப்பட்டி பஸ்ஸ்டாப் அருகே வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தார்.

புகார் மனுவின் அடிப்படையில் புலன் விசாரணையிலும் எதிரிகள் குற்றபுரிந்தது உண்மை என தெரியவந்ததால் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 345, 323, 324 ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

புகார்மனுவில் சம்பவ நேரம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 தனது தந்தை இறந்த விபரத்தை கேள்விப்பட்டு வந்ததாக சொல்லியுள்ளார் அதுகுறித்து விசாரணை செய்தார் என்றால் செய்யவில்லை. அ.சா.1ன் தந்தை இறந்ததற்கு அ.சா.1 தனியாக சென்றதாக சொல்லியுள்ளார், அ.சா.1ன் தந்தை இறப்பிற்கு வேறு யாரும் உடன் சென்றார் என விசாரணையில் துலங்குமா என்றால் துலங்காது. இலங்குளத்திற்கும் சம்பவயிடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 5 கிமீ இருக்கும். சம்பவயிடத்திற்கும் காவல்நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 10கிமீ. சம்பவயிடத்திலிருந்து காவல்நிலையத்திற்கு வர எவ்வளவு நேரம் என்றால் பஸ்வசதி இருந்தால் ஒரு மணி நேரத்தில் சென்றுவிடலாம்.

அ.சா.1 காவல்நிலையத்திற்கு ஆட்டோவில் வந்ததாக சொல்லியுள்ளார் என விசாரணையில் துலங்குமா என்றால் துலங்காது. சம்பவம் நடைபெறவில்லை என்றும் அதனால்தான் அ.சா.1 ஆட்டோவில் வந்ததாக சொல்லப்படும் ஆட்டோ டிரைவரை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதி, சொன்ன நேரத்தில் எந்த சம்பவம்

நடைபெறவில்லை என்றும், அதனால்தான் மேற்கொண்டு இவ்வழக்கில் எந்த ஆவணமும் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மேலதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்கவும், புள்ளிவிபர கணக்கிற்காகவும் எதிரிகள் மீது இவ்வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.03.06 17:32:15 +0530